423

423

## கிழக்கு ஐரோப்பாவில்

# விவசாயப் புரட்சி

1 SEP 1946

ஆர். எச். நாதன்

ஜனசக்தி பிரசுராலயம்
சென்னை.

J.5 N46
97635

## கிழக்கு ஐரோப்பாவில்

# விவசாயப் புரட்சி

12. SEP 1946

எழுதியது:
ஆர். எச். நாதன்
'ஜனசக்தி' உதவி ஆசிரியர்

ஜனசக்தி பிரசுராலயம்
1/6, டேவிட்ஸன் தெரு,
ஜி. டி., சென்னை

ஆகஸ்டு 1946] [விலை 4 அணா

TAMIL NADU ARCHIVES LIBRARY
97635

Janasakthi Publishing House Q. H. M. S. 402
Printed at the Janasakti Press
Date of Printing : 20th August, 1946.

J. 5 N46

# கிழக்கு ஐரோப்பாவில்

# விவசாயப் புரட்சி

நாற்பது கோடி மக்களாகிய நாம் இன்று சுதந்திரத்திற்காகப் போராடுகிறோம். சுதந்திர, ஜனநாயக, சுபீட்ச இந்தியாவைச் சிருஷ்டிப்பதே நமது லட்சியம். இதை எப்படி சாதிப்பது? நிலச்சுவான்தாரி முறையை அடியோடு ஒழிக்கவேண்டும். தேசத்திலுள்ள தொழிற்சாலைகளை யெல்லாம் தேசிய மயமாக்க வேண்டும். அதாவது பிரிட்டிஷ் முதலாளிகளுக்கும், இந்திய முதலாளிகளுக்கும் சொந்தமான பெரிய தொழிற்சாலைகளை தேசத்தின் பொதுச் சொத்தாக்க வேண்டும். அப்பொழுதுதான் சுதந்திர, சுபீட்ச இந்தியாவை, சுபீட்சம் இன்ப நடம்புரியும் கிராமங்களையும், நகரங்களையும் எழுப்ப முடியும்.

இந்த லட்சியத்திற்காக கோடானு கோடி மக்கள் போராடி வருகிறோம். ஆனால், நமக்குள் ஒற்றுமை யில்லாததால், ஏகாதிபத்தியத்திற்கு எதிரிடையாக ஐக்கிய முன்னணியை ஸ்தாபிக்காததால், நாம் இந்த லட்சியத்தை இன்னும் அடையவில்லை. ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு ஆளாகி யிருக்கிறோம். அதன் பலனாக, நாம் அடிமைப் படுகுழியில், வறுமையில் குமிழ் விட்டுக்கொண்டிருக்கிறோம்.

போலந்து, ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, செக்கோஸ்லோவேகியா, யுகோஸ்லேவியா, அல்பேனியா முதலிய நாடுகள் ஐரோப்பா கண்டத்தின் மத்தியிலும், கிழக்கிலும் இருக்கின்றன. ஆகவே, இவைகளை மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்று அழைக்கிறார்கள்.

நமது நாட்டைப்போல், இந்த நாடுகளும் அநேகமாக பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களுக்கு அடிமையாகவே இருந்தன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நமது நாட்டைச் சுரண்டி வருவதுபோல, மேற்கூறிய ஏகாதிபத்தியங்கள் மத்திய, கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சுரண்டிக் கொழுத்தன. நமது நாட்டிலுள்ள கோடானு கோடி விவசாயிகளையும், தொழிலாளர்களையும்நமது நாட்டிலுள்ள நிலச்சுவான்தார்களும், ஜமீன்தார்களும், மிட்டாதார்களும், சுதேச முதலாளிகளும் சுரண்டிக் கொழுத்து வருவதோடு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் ஆதரித்து வருகிறார்களல்லவா?

அதே மாதிரியாக, மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் சுதேச முதலாளிகளும், நிலச்சுவான்தார்களும் சுதேச மக்களை அட்டைபோல் உறிஞ்சி வந்ததோடு, அன்னிய ஏகாதிபத்யங்களின் தாஸானு தாஸர்களாகவும் இருந்தார்கள். நம்மைப் போல், அந்த நாடுகளிலுள்ள பொது மக்கள் வறுமையாலும், பிணியாலும், அறியாமையாலும் சொல்லொணுக் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளானுர்கள்.

நம்மைப்போல், அந்த நாடுகளிலுள்ள விவசாயிகளும், தொழிலாளர்களும், பொது மக்களும் சுதேச முதலாளிகளையும், நிலச் சுவான்தார்களையும், அன்னிய ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்துப் போராடி வந்தார்கள்.

நமது நாட்டில் அந்தச் சுரண்டும் கும்பல்கள் நமது நாட்டுத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் சுட்டுவீழ்த்தி, பொதுமக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி வருவதுபோல், மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள சுரண்டும் கும்பல்கள் பொதுமக்களை ஈவிரக்கமின்றி நசுக்கி வந்தார்கள். ஆனுல், நமது நாட்டுப் பொது மக்களைப்போல், அந்த நாடுகளிலுள்ள விவசாயிகளும், தொழிலாளர்களும் போர்க்கொடியைத் தாழ்த்தவேயில்லை. வானளாவப் பறக்கவிட்டார்கள். அடக்குமுறை அதிகரிக்க, அதிகரிக்க, வீரம் செறிந்த போராட்டமும் வளர்ந்து, வலிமைபெற்றுக்கொண்டேயிருந்தது.

இரண்டாவது உலகமகாயுத்தம் வெடித்தபொழுது இந்த நாடுகளின் நிலைமை இதுதான். பெயரளவில் சுதந்திர நாடுகளாக இருந்தன. ஆனுல், நமது நாட்டைப்போல், ஏகாதிபத்தியங்களும், சுதேச நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும்தான் எஜமானர்கள், ஆளும் வர்க்கம். அரசியல் அதிகாரம் இந்தச் சிறு கும்பவிடம்தான் இருந்தது. பொதுஜனங்களுக்கு அரசியலில் அணுவளவேனும் உரிமை கிடையாது.

மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பிற்போக்கு நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும் பாஸிஸ்டுகளுக்கும் தங்கள் நாடுகளைப் பாத காணிக்கையாகக் கொடுத்தார்கள். பின்னர் ஜெர்மானிய பாஸிஸ்டுகள்தான் இந்த நாடுகளின் எஜமானர்களானுர்கள்.

உலகமுழுவதும் பாசிஸ்டு சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக, ஜப்பானிய, இத்தாலிய, ஜெர்மானிய பாசிஸ்டுகள் அநியாயமான ஆக்ரமிப்பை ஆரம்பித்தார்கள். ஜனநாயக நாடுகள் இதைத் தடுக்கப் போராடி வந்தன. சோவியத் தலைமையில், ஜனநாயக மக்கள் அணிவகுத்து வந்தார்கள்.

நமது நாட்டின் நிலைமைதான் இந்த நாடுகளிலும் இருந்தது. ஜனங்களை ஒன்று திரட்டி, பாசிஸ்டுகளை முறியடித்தால், இந்த ஜன சக்தியை உலகில் எந்த சக்தியும் நசுக்கமுடியாது என்று நாம் கூறினோம். இது ஏகாதிபத்தியங்களின் சக்தியை, பிற் போக்காளர்களின் சக்தியைப் பலஹீனப்படுத்தும் என்று எடுத் துரைத்தோம். ஆனால், பெரும்பாலான மக்கள் நமது வேண்டு கோளுக்குச் செவி சாய்க்கவில்லை. இதன் பலனாக நாம் இன்னும் அடிமைகளாகவே வாழ்கிறோம்!

நம்மைப்போல் மத்திய கிழக்கு ஐரோப்பிய மக்கள் தீர்க்க தரிசனத்துடன், சுதந்திரப் பாதையில் சென்றார்கள். ஜெர்மானிய பாசிஸ்டுகளை அடித்துக் துரத்தினால், பழைய குருடி கதவைத் திறடி என்ற பழமொழிபோல், பழைய ஏகாதிபத்தியங் களும், பழைய சுதேச பிற்போக்காளர்களும் அதிகார பீடத்தில் உட்கார வருவார்கள்; பொதுஜனங்களை நசுக்க முயற்சி செய் வார்கள் என்பதையும் நன்கு உணர்ந்திருந்தனர். இதை எப்படி முறியடிப்பது? ஜெர்மானிய பாசிஸ்டுகளை முறியடிக்கும் சக்தி ஏகாதிபத்தியங்களையும், சுதேச பிற்போக்காளர்களையும் குழி வெட்டிப் புதைக்கும்; இந்த உண்மையை உணர்ந்தனர். எனவே, யுத்தகாலத்தில் பொதுமக்களை ஒன்றுதிரட்டி, அசைக்க முடியாத ஒற்றுமையை ஏற்படுத்தினார்கள். சகல தேசீய இனங்க ளுக்கும் சரி சமத்துவம் கொடுத்து, சுயநிர்ணய உரிமை கொடுத் தும் எஃகுபோன்ற ஒற்றுமையைக் கட்டினார்கள்.

சுதந்திரத்திற்காக பாசிஸ்ட் எதிர்ப்புப் போராட்டத்தில் குதித் தார்கள். பாசிஸ்டுகள் குழிவெட்டிப் புதைக்கப்பட்ட பின்பு, எதிர்பார்த்தபடி பழைய சுரண்டும் கும்பல்கள் பழைய அடிமைத் தனத்தை நிலைநாட்ட முயற்சித்தன. ஆனால், ஒன்றுபட்ட சக்தி, போராட்டத்தில் புடம்போட்டு எடுக்கப்பட்ட ஒற்றுமை இவர்க ளுக்கு இடமளிக்கவில்லை. பிற்போக்காளர்கள் படுதோல்வியுற்ற னர். பொதுஜனங்களின் சர்க்கார்கள்—உண்மையான ஜனநாயக சர்க்கார்கள்—மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் எழுந்தன.

பொதுஜனங்களின் சர்க்கார்கள், பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து, நிலச்சுவான்தாரி முறையை ஒழித்து, பெரிய நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தமான நிலத்தை நில மில்லாத ஏழை விவசாயிகளுக்கு வினியோகித்தன. அன்னிய ஏகாதிபத்தியங்களுக்கும், அவர்களது கையாட்களான சுதேச முதலாளிகளுக்கும், பாசிஸ்டுகளோடு ஒத்துழைத்தவர்களுக்கும் சொந்தமான தொழிற்சாலைகளை தேசீய மயமாக்கினார்கள்.

தேசத்தின் பொதுச் சொத்தாக்கினார்கள். சகல மக்களுக்கும் சரி சமத்துவ மளித்தார்கள். புதிய சமூகத்தை எழுப்பினார்கள்.

நமது நாட்டிலுள்ள கோடானு கோடி மக்கள் விரும்பும் புதிய சமூகத்தை அமைத்திருக்கிறார்கள்.

" உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்--வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்--வெறும்
வீணருக்குழைத்துடலம் ஓயமாட்டோம்"

என்று மகாகவி பாரதியார் கனவு கண்ட புதிய சமுதாயத்தை அமைத்திருக்கிறார்கள். அவை வாழ்க!

சுரண்டுதலை அடியோடு ஒழித்த இந்த நாடுகள் ஏகாதிபத்தியங்களின் கண்ணை உறுத்துகின்றன.

இந்தியா, இந்தோனேஷ்யா, பர்மா, மலேயா முதலிய நாடுகளிலுள்ள சுதந்திர இயக்கங்களை நசுக்கிவரும் ஏகாதிபத்தியங்கள், தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களையும், அமைதியாக நடக்கும் ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் பீரங்கி கொண்டு சுட்டு வீழ்த்தும் ஏகாதிபத்தியங்கள், பாஸிஸ்டு பிராங்கோ ஸ்பெயினையும், பாஸிஸ்டு கிரீஸையும் ஆதரிக்கும் ஏகாதிபத்தியங்கள் "இந்த நாடுகளில் ஜனநாயகமில்லை. யதேச்சாதிகாரம் நடக்கிறது......" என்று தொண்டை கிழியக் கத்துகின்றன.

சீன மக்கள் சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், சுதேச பிற்போக்காளர்களையும் எதிர்த்துப் போராடுவதை, "சோவியத் யூனியன் தூண்டி விட்ட போராட்டம்" என்றும், இன்று நமது நாட்டில், காஷ்மீரத்திலுள்ள மக்கள் சர்வாதிகார சுதேச மன்னனையும், அவனது எஜமானனை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராடி வருவதை, " சோவியத் யூனியன் தூண்டிவிட்ட போராட்டம்" என்று திரித்துக் கூறும் ஏகாதிபத்தியங்கள், "மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் அனைத்தும் ரஷ்யாவின் கைப்பாவைகள்; ரஷ்ய ஏகாதிபத்தியம் இந்த நாடுகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியிருக்கிறது" என்று பொய்ப் பிரசாரம் செய்கின்றன.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்த பின்பு, நமது நாட்டிலுள்ள விவசாயிகளும், தொழிலாளர்களும் பஞ்சத்தாலும், பிணியாலும் தவியாய்த் தவிக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் பஞ்சத்தால் மடியும்பொழுது, உணவுப் பொருள்களைக் கள்ள மார்க்கெட்டில் பதுக்கி வைத்திருக்கும் நிலச்சுவான்தார்களையும், லட்சக்கணக்கான மக்கள் மானத்தைக் காக்க ஒரு முழம் துணியின்றி, தற்கொலை செய்துகொள்ளும்பொழுது, துணியையெல்லாம் கள்ள மார்க்கெட்டில் பதுக்கி வைத்திருக்கும் முதலாளிகளையும் எதிர்த்து, நியாயமான சம்பளத்திற்காகப் போராடும் தொழிலாளர்களை "ரஷ்யாவின் ஏஜெண்டுகளான கம்யூனிஸ்டுகளால் தூண்டிவிடப்பட்டவர்கள்" என்று நமது சில தேசியப் பத்திரிகைகள் பத்தி பத்தியாக எழுதவில்லையா?

இதே பேர்வழிகள், நமக்குச் சுதந்திரமளிக்க மறுக்கும், நம்மை அடிமைப்படுத்தியிருக்கும் எதிரிகளின்—ஏகாதிபத்தியங்களின்—பொய்ப் பிரசாரத்தை நம்பி, மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளையும், சோவியத் யூனியனையும் நாக்கில் நரம்பில்லாமல் திட்டுகிறார்கள்.

> "ஸ்காந்திநேவியா நாடுகள், போலந்து, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளில் ரஷ்ய சர்க்கார் சொல்வதைத் தட்டாத, அல்லது தட்டமுடியாத ஆட்சிகள் இருக்கின்றன" என்று "பாரத தேவி" எழுதுகிறது (23—3—46).

> "கிழக்கு ஐரோப்பா முழுவதும் ரஷ்யாவின் ஆதிக்கப் பிரதேசமாக ஆய்விட்டது" என்று "தினமணி" எழுதுகிறது. (3—2—46).

நமது நாட்டில், தொழிலாளர்களும், விவசாயிகளும் நடத்தும் நியாயமான உரிமைப் போராட்டத்தைக் கண்டிக்கும் பத்திரிகைகள் இவை. எனவே, அந்த நாடுகளில், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் அனுசரணையான சர்க்கார்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்; அதனால்தான் இவை நாக்கில் நரம்பில்லாமல் திட்டுகின்றன என்பது தெளிவாகத் தெரியும்.

ஆகவே, இந்த நாடுகளின் இன்றைய நிலைமை என்ன, அங்கு எத்தகைய சர்க்கார்கள் ஏற்பட்டிருக்கின்றன; ஏகாதிபத்தியங்கள் ஆத்திரமடைவதற்கு மூலகாரணமென்ன, நமது தேசியப் பத்திரி

கைகள் நம்மைச் சுதந்திரப் பாதையில் அழைத்துச் செல்லாமல், எப்படி ஏகாதிபத்தியங்களுக்கு வால் பிடிக்கும் பாதையில் இழுத்துச் செல்கின்றன என்பன போன்ற பல விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சிறு துண்டுப் பிரசுரத்தில், பொது மக்களுக்கு உண்மையான நிலைமையைச் சுருக்கமாக எடுத்துரைக்க விரும்புகிறோம்.

## நமது நாட்டைப்போல் விவசாய நாடுகள்

மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் நமது நாட்டைப்போல் விவசாய நாடுகள். மக்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். உதாரணமாக, நமது நாட்டில் மொத்த ஜனத்தொகையில் 87 சத விகிதம் பேர்கள் விவ விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதே மாதிரியாக, **யுகோஸ்லேவியாவில்** 71 சத விகிதம் பேர்களும், **ஹங்கேரியில்** 50 சத விகிதம் பேர்களும், **ருமேனியாவில்** 78 சத விகிதம் பேர்களும், **போலந்தில்** 63 சத விகிதம் பேர்களும், **பல்கேரியாவில்** 72 சத விகிதம் பேர்களும்,—இதே மாதிரியாக **அல்பேனியா, கிழக்கு ஜெர்மனி (பிரஷ்யா)** முதலிய நாடுகளிலும் பெரும்பாலான மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நமது நாட்டைப்போல, ஒரு சில நிலச்சுவான்தார்களிடம் நிலமெல்லாம் குவிந்து கிடக்கிறது. பெரும்பாலான மக்களுக்கு நிலம் கிடையாது. உதாரணமாக,

**இந்தியாவில்:** 41 லட்சம் பேர்கள் பெரிய நிலச்சுவான்தார்கள்; விவசாயத்தொழில் புரியாமல், பிறர் உழைப்பைச் சுரண்டி வாழ்கிற புல்லுருவிகள். மூன்று கோடியே நாற்பது லட்சம் குடும்பங்கள் நிலமில்லாத விவசாய அடிமைகளின் குடும்பங்கள். இரண்டு கோடியே ஐந்து லட்சம் குடும்பங்கள் குத்தகைச் சீட்டு எழுதிக்கொடுத்த அடிமைகளின் குடும்பங்கள். இரண்டு கோடி குடும்பங்கள், சொந்த நிலமிருந்தும் ஏழைகளாக இருந்து, கடன் கொடுத்தவர்களிடம் அடிமைகளாக இருக்கும் குடும்பங்கள். (1931-ம் வருட சர்க்கார் அறிக்கைப்படி 1800 கோடி ரூபாய் கடன் பட்டவர்கள்).

**ஹங்கேரியில்:** மொத்த விவாசாயிகளில், 200-ல் ஒரு பங்கினரான பெரிய நிலச்சுவான்தார்கள், ஐந்தில் நான்கு பங்கு விவசாயிகளிடமுள்ள மொத்த நிலத்தைவிட இரண்டுமடங்கு அதிகமாக நிலத்தைப் பெற்றிருந்தனர். மொத்த நிலத்தில் பாதி 16000 நிலச்சுவான்தார்களிடம் இருந்தது. ஹங்கேரியின் மொத்த ஜனத்தொகை 80 லக்ஷம்; இதில் 13 லட்சம் விவசாயிகளுக்கு நிலமே

கிடையாது. 6 லட்சம் பேர்கள் பண்ணை அடிமைகள். 13 லட்சம் பேர்களுக்கு இரண்டு மூன்று ஏக்கர் நிலம் இருந்தது. இவர்களுடைய சராசரி வருடவருமானம் 200 ரூபாய்க்கும் குறைவாகவே இருந்தது.

**ருமேனியாவில்:** மொத்த விவசாயிகளில் 100 ல் ஒருபங்கினரான நிலச்சுவான்தார்கள், நான்கில் மூன்றில் பங்கு விவசாயிகளிடமிருந்த மொத்த நிலத்தில், பாதி நிலத்தை வைத்திருந்தார்கள்.

**போலந்தில்:** மொத்த விவசாயிகளில் 100 ல் ஒரு பங்கினரான பெரிய நிலச்சுவான்தார்களிடம், மூன்று இரண்டு பங்கு விவசாயிகளிடம் இருந்த மொத்த நிலத்தைவிட மூன்று மடங்கு அதிகமாக நிலமிருந்தது.

**யுகோஸ்லேவியாவில்:** மொத்த விவசாயிகளில் 67 சதவிகிதம் பேர்களிடம் மொத்த நிலத்தில் 30 சதவிகிதம்தான் இருந்தது. அதாவது, 12 ஏக்கருக்கு குறைவாகவே ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திடமும் நிலமிருந்தது. வயோடிமா மாகாணத்தில் மாத்திரம் ஒரு லட்சம் நிலமில்லாத விவசாயிகள் இருந்தார்கள். 208 பெரிய நிலச்சுவான்தார்களிடம் 10 லட்சம் ஏக்கர் நிலமிருந்தது. 3,37,424 விவசாயக் குடும்பங்களுக்கு 13,51,000 ஏக்கர் நிலம்!

**ஆல்பேனியாவில்:** மொத்த நிலத்தில் நான்கில் மூன்று பாகம் 160 பெரிய நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தம்.

**செக்கோஸ்லோவியாவில்:** மொத்த விவசாயிகளில் ஐந்தில் ஒரு பாகத்தினரான பெரிய நிலச்சுவான்தார்கள், பத்தில் ஏழு பங்கு விவசாயிகளிடமிருந்த நிலத்தைவிட அதிகமாக வைத்திருந்தார்கள்.

**பிரஷ்யாவில்:** கிழக்கு ஜெர்மனியில் 3000 நிலச்சுவான்தார்கள் 70 லட்சம் விவசாயிகள் வைத்திருந்த மொத்த நிலத்தைவிட அதிகமாகப் பெற்றிருந்தார்கள்.

**பல்கேரியாவில்:** இங்கு பெரிய நிலச்சுவான்தார்கள் கிடையாது. ஆயினும் 14 ஆயிரம் பெரிய நிலச்சுவான்தார்களிடம் மாத்திரம் 50 ஏக்கருக்குமேல் நிலமிருந்தது. 63 சதவிகிதம் விவசாயக் குடும்பங்களுக்கு, சராசரி 12 ஏக்கருக்குக் குறைவாகவே நிலமிருந்தது. ஏனையவர்கள் நிலமில்லாத ஏழைகள்.

## விவசாய அடிமைகளின் நிலைமை

நமது நாட்டிலுள்ள நிலமில்லாத விவசாயிகளைப்போல், மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள ஏழை விவசாயிகள் பண்ணை

அடிமைகளாக வாழ்ந்தனர். வறுமையும், பிணியும் அவர்களை அரித்துத் தின்றன. இரவு பகலாக உழைத்து, நிலச்சுவான்தார் களின் பண மூட்டையைப் பெருக்கி, வயிற்றின்மேல் ஈரத்துணி யைக் கட்டிக்கொண்டு நடைப்பிணங்களாக வாழ்ந்தனர்.

ஓரிரண்டு ஏகர் நிலம் வைத்திருந்த ஏழை விவசாயிகளின் நிலைமையும் படுமோசமாகவே இருந்தது. சாகுபடி செய்வதற்கு வேண்டிய கருவிகள், மாடுகள், விதைகள் முதலியவைகளை வாங் கப் பணம் கிடையாது. வருடா வருடம் கிராம அட்டைகளிட மிருந்து—கொள்ளை வட்டி வாங்கும் லேவாதேவிக்காரர்களிட மிருந்து—கடன் வாங்கி தற்காலீகமாக நிலைமையைச் சமாளித்து வந்தார்கள். இவ்வாறு வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய அளவுக்கு வருமானமில்லாததால், வருடா வருடம் கட னும், வட்டியும் அதிகரித்துக்கொண்டே போயிற்று. இறுதியில் லேவாதேவிக்காரர்களின் அடிமைகளானார்கள்.

"இருள் சூழ்ந்த ஹங்கேரி" என்ற புத்தகத்தில், போவோஸி ஹோவார்த் ஹங்கேரிதேச விவசாயிகளின் நிலை மையைப் பின்வருமாறு சித்தரிக்கிறார் :—

> "இந்தக் கதையைக் கேளுங்கள். பழைய கதையல்ல. 1920-க்கும் 1937-க்கும் மத்தியில் நடந்த சம்பவம். பல்லா விஸினி என்ற நிலச்சுவான்தாருக்கு 60,000 ஏகர் நிலம் சொந்தம். அவருடைய நிலத்தில் வேலை செய்யும்படி எங் களைக் கேட்டுக்கொண்டார். நாங்கள் வெகுதூரத்திலிருந்து வரவேண்டியிருந்தது. எனவே, அவருடைய நிலத்திலேயே குடிசைகளைக் கட்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். எங்களுக்கு வீடு கட்ட நிலமும், இரண்டு ஏகர் நிலத்தை குத் தகைக்கும் கொடுத்தார்..................நாங்கள் மொத்தம் 8 கிராமங்களை அமைத்திருந்தோம். அறுபதினாயிரம் ஏகரில் சில ஏகர் நிலத்தில் நாங்கள் வீடு கட்டியிருந்ததால், ஏற்பட்ட நஷ்டத்தை அவரால் சகிக்க முடியவில்லை! ஆகவே, எங் களை கிராமத்தை விட்டு வெளியேறும்படி உத்திரவிட்டார். நாங்கள் மறுத்தோம். உடனே அவர், போலீசாரையும், படைகளையும் கொண்டு எங்களை வெளியே துரத்தினர். அடுத்த நாள் நாங்கள் திரும்பி வந்தோம். வேறு எங்கே போவது? திரும்பவும் போலீஸ்காரர்கள் வந்து எங்களு டைய குடிசைகளை இடித்துத் தகர்த்து, எங்களை வெளியே துரத்தினர்கள். எங்களுடைய சாமான்களையெல்லாம் கொண்டுபோய் விட்டார்கள். பின்னர் டிராக்டர்கள் வந்து (நிலத்தை உழும் யந்திரங்கள்) வீடுகள் இருந்த கிராமத்தை வயல்களாக மாற்றின...."

கிழக்கு ஜெர்மனியில் விவசாயிகள் அடிமைகளாகவே வாழ்ந்தார்கள் என்பதை 1944-ம் வருடம் ஒரு ஜெர்மானிய பிரமுகர் பின்வருமாறு எழுதினர்.

"இங்கு, நிலச்சுவான்தார்கள்தான் சுதந்திரமாக, மனிதர்களாக வாழ்ந்தார்கள். நிலச்சுவான்தாருக்கும், பண்ணை அடிமைகளுக்கு மிடையேயுள்ள உறவு, பழைய நிலப்பிரபுத்துவ முறையை அடிப்படையாகக் கொண்டது. பண்ணை அடிமைகள் எஜமானர்களின் சட்டையை முத்தமிட்டார்கள். ஜெர்மானியன் வீட்டிற்குள் நுழையுமுன்பு தங்களுடைய தொப்பியையும், செருப்பையும் கழட்ட வேண்டும். இன்றுகூட, ஒரு பண்ணை அடிமை கல்யாணம் செய்து கொள்ளும் முன்பு, அவனது மனைவி, முதல் நாள் இரவை நிலச்சுவான்தாரோடு கழிக்கவேண்டும்."

"பிரிட்டிஷ் ஸர் வே காண்ட் புக்" ருமேனியாவிலுள்ள விவசாயிகளின் பரிதாபகரமான நிலைமையைப் பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறது:

"விவசாயிகள் தங்களது உழைப்புச் சக்தியை முன்னமேயே விற்றுவிடுகிருர்கள். தலைதெறிக்கும் வேகத்தில் அவர்களது கடன் சுமை அதிகரிக்கிறது. அவர்களுடைய சொந்த உடலோ, அல்லது அவர்களுக்குச் சொந்தமான சிறு நிலமோ அவர்களுடையதல்ல. நிலச் சுவான்தார்களின் சொந்தச் சொத்து."

ஒரு விவசாயியின் வருட வருமானம் 130 லிருந்து 200 ரூபாய் வரையிலும்தான். யுகோஸ்லேவியாவில், "விவசாயிகளின் குடிசைகள் ஆடு மாடுகளின் தொழுவங்களைவிடப் படு மோசமானது" என்று "பால்கன்" என்ற புத்தகம் குறிப்பிடுகிறது. (ராயல் இன்ஸ்டிட்யூட் வெளியிட்ட புத்தகம்).

ஜான் எல். ஸ்பிவாக் என்ற அமெரிக்க எழுத்தாளர், "அடக்கு முறையின்கீழ் ஐரோப்பா" என்ற புத்தகத்தில் போலந்திலுள்ள ஒரு விவசாயியோடு சம்பாஷணை செய்ததைக் குறிப்பிடுகிருர்.

"உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டேன். "அந்த விவசாயி, தயங்காமல் எனக்கு உப்பு வேணும். உப்பில்லாமல் உருளைக்கிழங்கை திங்கவே முடியவில்லை" என்று பதிலிறுத்தான். வேறு என்ன வேண்டும் என்று கேட்டேன்,

"டீ குடிப்பதற்கு, ஞாயிற்றுக்கிழமைகளிலாவது சிறிது சர்க்கரை வேண்டும்." கடந்த ஒரு வருட காலமாக நான் சர்க்கரையைப் பார்த்ததே கிடையாது என்று பதில் சொன்னன்."

1939-ம் வருடம் செப்டம்பர் மாதம் 28-ந் தேதி யன்று, லண்டனிலுள்ள போலந்து ஸ்தானிகருக்கு 'லாயிட் ஜார்ஜ்' ஒரு கடிதமெழுதியிருந்தார். அதில், "பழைய இத்துப்போன நிலப்பிரபுத்துவ முறை இன்னும் அமுலில் இருப்பதால், போலந்து விவசாயிகள் வறுமையால் பெரிதும் கஷ்டப்படுகிறர்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

நமது நாட்டிலுள்ள விவசாயிகள் தங்களை அதலபாதாளத்தில் அமுக்கிவரும் நிலச்சுவான்தாரி முறையை அடியோடு ஒழிக்கப் போராடி வருகிறர்களல்லவா ? அதே மாதிரியாக ஐரோப்பாவிலுள்ள விவசாயிகளும் பல நூற்றண்டுகளாகப் போராடி வந்தார்கள். இப்பொழுது வெற்றியும்பெற்றுவிட்டார்கள்.

## ஏகாதிபத்தியச் சுரண்டல்

நமது நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் பெரும்பாலானவை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முதலாளிகளுக்குச் சொந்தம். நமது தொழிலாளர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுத்து, அபரிமிதமாக லாபம் சம்பாதித்து வருகிறர்கள். நமது நாட்டிலுள்ள மூலப் பொருள்களை மலிவான விலைக்கு வாங்கி, அவைகளை லண்டனில் பண்டங்களாக மாற்றி அதிக விலைக்கு நமக்கே விற்று வருகிறர்கள். இதைத் தவிர, நமது நாட்டு சுதேசத் தொழிற்சாலைகளை வளர விடாமல் தடுத்து வருகிறர்கள். சுருங்கக் கூறின் நம்மைச் சுரண்டிக் கொழுக்கிறர்கள்.

அதே மாதிரியாக, மத்திய, கிழக்கு ஐரோப்பாவை பிரிட்டிஷ் அமெரிக்க, பிரெஞ்சு, ஜெர்மானிய முதலாளிகள் சுரண்டிக் கொழுத்தார்கள். அந்த நாடுகளிலுள்ள தொழிற்சாலைகள் அனைத்தும் அநேகமாக அன்னிய ஏகாதிபத்திய முதலாளிகளுக்கே சொந்தம்.

**யுகோஸ்லேவியாவில் :** "ஜனரல் ஐரோப்பிய அப்ஸர்வர்" என்ற பத்திரிகை (செக்கோஸ்லோவியா ஜனநாயகவாதிகளால் லண்டனில் நடத்தப்படும் பத்திரிகை)

"அநேகமாக சகல தொழிற்சாலைகளும் அன்னிய நாட்டினருக்கே சொந்தம்" என்று எழுதுகிறது. 1938-ம் வருடத்தில், அன்னிய நாட்டு முதலாளிகள் 36 கோடி ரூபாய் மூலதனத்தை

யுகோஸ்லோவியாவில் போட்டிருந்தார்கள். இதில் 7½ கோடி ரூபாய் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கும், 7½ கோடி ரூபாய் பிரெஞ்சு முதலாளிகளுக்கும் சொந்தம். ஏனைய மூலதனம் அமெரிக்க, ஜெர்மானிய முதலாளிகளுக்குச் சொந்தம். யுகோஸ்லேவியா சர்க்கார் 180 கோடி ரூபாய் கடன் வாங்கி யிருந்தது. இதில் 75 சதவிகிதம் அந்நிய நாடுகளிலிருந்து வாங்கின கடன்.

**ருமேனியாவில்:** இங்கு, முக்கியமான கைத்தொழில் சாலைகளில் மொத்த மூலதனம் 37½ கோடி ரூபாய். இதில் பெரும்பாகம், பிரிட்டிஷ் அமெரிக்க முதலாளிகளின் மூலதனம். இதைத் தவிர, டைடான் நாண்ட்ராக் இரும்புத் தொழிற்சாலையும், மலாக்ஸா லோகோ மோடிவ் தொழிற்சாலையும், (இதில் 26 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறது.) பிரிட்டிஷ் முதலாளிகளுக்குச் சொந்தம்.

**ஹங்கேரியில்:** பிரிட்டிஷ் அமெரிக்க முதலாளிகள் ஹங்கேரிக்கு 57 கோடி ரூபாய் கடன் கொடுத்திருந்தார்கள். ஹங்கேரியிலுள்ள பாங்குகள் எல்லாம் அநேகமாக இவர்களுக்குத்தான் சொந்தம். ஹங்கேரியிலுள்ள எண்ணைத் தொழிற்சாலைகள் அமெரிக்க முதலாளிகளுக்குச் சொந்தம்.

இதேமாதிரியாக **போலந்து, ஆல்பேனியா, செக்கோஸ்லோவேகியா, பல்கேரியா** முதலிய நாடுகளிலுள்ள தொழிற்சாலைகள் எல்லாம் அன்னிய ஏகாதிபத்திய முதலாளிகளுக்குச் சொந்தம்.

இவ்வாறு நேரடியாகச் சுரண்டி வந்ததைவிட, கையாலாகாத சர்க்கார்கள் அன்னிய ஏகாதிபத்தியங்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய் கடன் வாங்கி யிருந்ததால், இந்த நாடுகளிலுள்ள சர்க்கார்களின் வருமானத்தில் 20 சத விகிதம் கடனுக்கு வட்டியாக அந்நிய நாடுகளுக்குச் சென்றது.

இவ்வாறு அந்நிய ஏகாதிபத்திய முதலாளிகளும், அவர்களது கையாட்களான சுதேச முதலாளிகளும், நிலச்சுவான்தார்களும் பொது மக்களைச் சுரண்டிக் கொழுத்தனர்.

இந்தியாவிலுள்ள 40 கோடி ஜனங்கள் இன்று ஏகாதிபத்திய முதலாளிகளை இந்தியாவிலிருந்து துரத்தி, சுரண்டுதலுக்கு இனிமேல் இடம் கொடுக்காமலிருப்பதற்காக, சகல தொழிற்சாலைகளையும் தேசத்தின் பொதுச் சொத்தாக்கப் போராடி வருகிறோமல்லவா? இதே மாதிரியாக, மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள மக்களும் பல வருடங்களாகப் போராடி வந்தார்கள். இப்பொழுது வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

# பிற்போக்காளர்களின் எதேச்சாதிகாரம்

நமது நாட்டில் பல ஜமீன்தார்களும், நிலச்சுவான்தார்களும் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் அவர்களுக்குச் சொந்தம். அவர்களுடைய ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் பகுதிகளுக்குப் போய் பாருங்கள். பண்ணை அடிமைகளுக்கு கொஞ்சமேனும் சுதந்திரம் கிடையாது. நிலச்சுவான்தார்கள் வைத்தது தான் சட்டம். ஜனநாயக உரிமைகளும், பிரஜா உரிமைகளும் மருந்துக்குக்கூடக் கிடையாது. தேர்தல் வந்தால், "எஜமான்" சொல்கிற பேர்வழிக்குத்தான் ஓட் போடவேண்டும். அரசியல், பொருளாதாரம், சமூக இயல் ஆகிய சகல துறைகளிலும் இவர்கள்தான் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.........

மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளின் நிலைமை இன்னும் மோசம். பத்தாம் பசலி நிலப்பிரபுத்துவ முறை—நிலச்சுவான்தார், பண்ணை அடிமை என்ற முறை—அமுலிலிருந்தது.

எனவே, இந்த நிலச்சுவான்தார்கள்தான் ஆளும் வர்க்கமாகவும் இருந்தார்கள். மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள், படை, போலீஸ் ஆகியவைகளின் தலைவர்கள்—அனைவரும் நிலச்சுவான்தார் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களிடமிருந்து ஜனநாயக உரிமைகளை எதிர்பார்க்க முடியுமா? எதேச்சாதிகாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தார்கள்.

"பிரிட்டிஷ் ஸர் வே கரண்ட் புக்" ஹங்கேரியின் நிலைமையையும் வெட்டவெளிச்சமாக்குகிறது:

> "ஹங்கேரியிலுள்ள விவசாயிகள் கீழ்த்தரமான வர்க்கமாகக் கருதப்பட்டார்கள். நூறாயிரம் ஆண்டுகளாக, அரசாங்க யந்திரம் அவர்களை அதே நிலைமையில் அமுக்கி வந்தது" என்று அந்தப் புத்தகம் கூறுகிறது.

> "தேர்தல் தினத்தன்று, நிலச்சுவான்தார்கள் பிற்போக்காளர்களுக்கு ஓட்டுப் போடும்படி பண்ணை அடிமைகளிடம் கூறுவார்கள். 'ஏனைய கட்சிகள் பண்ணை அடிமைகளை அணுகவே முடியாது" என்று "ஸெல்ப்பிட் ரேய்ட்" என்ற புத்தகத்தில் கிழக்கு ஜெர்மனியைப்பற்றி கர்ட்ரீஸ் குறிப்பிடுகிறார்.

"பிரிட்டிஷ் ஸர் வே கரண்ட் புக்" என்ற புத்தகம் ருமேனியாவில் யார் ஆட்சி புரிந்தார்கள், அவர்களுடைய கொள்கை என்னவென்பதை அம்பலப் படுத்துகிறது:

"ருமேனியாவை ஒரு சிறிய கும்பல்தான் ஆட்சி புரிந்து வந்தது. சிவில் உத்தியோகஸ்தர்களும் இவர்களுடைய சகாக்கள்தான். அதிகாரிகளுக்கு மிக மிகக் குறைந்த சம்பளம் கொடுக்கப்பட்டது. ஏனவே, லஞ்சம் வாங்கி வருமானத்தைப் பெருக்கி வந்தார்கள். குறைந்த சம்பளம் வாங்கும் போலீஸ்காரர்கள், லஞ்சம் வாங்குவதற்காக, அனாவசியமாகப் பொதுஜனங்களைக் கைது செய்து வந்தார்கள்......."

போலந்திலோ? "பதினாறு, அல்லது பதினேழு குடும்பங்கள் தான் போலந்தை ஆண்டுவந்தது......" என்று "ஐரோப்பாவுக்கு எச்சரிக்கை" என்ற புத்தகத்தில் எட்மண்ட்பால் குறிப்பிடுகிறார்.

நிலப்பிரபுத்துவ முறை என்ற குட்டையில் ஊறித் தடித்தவர்களிடமிருந்து ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியுமா? இந்த ஆளும் வர்க்கம் முற்போக்கு சக்திகளை ஆதரிக்குமா? நமது நாட்டிலுள்ள நிலச்சுவான்தார்களைப் பாருங்கள். சதா சர்வகாலமும் பிற்போக்காளர்களைத்தான் ஆதரித்து வருகிறார்கள்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தாஸானுதாஸர்கள். ஏகாதிபத்தியத்தின் அடிமைப் பட்டத்தை—ராவ்பகதூர், திவான்பகதூர் பட்டங்களை—நெற்றியில் ஒட்டித் திரிகிறவர்கள்.

உள்நாட்டில் சர்வாதிகார ஆட்சியை நடத்துகிறவர்கள் பொதுஜன எழுச்சியை நசுக்குகிறவர்கள். தத்தம் நாட்டிலுள்ள தேசிய இனங்களை நசுக்கி, அடிமைப்படுத்தி பொது மக்களைப் பிளவுபடுத்தி வந்தார்கள். இவ்வாறு பொது மக்களைப் பிளவுபடுத்தி, ஜனசக்தியைப் பலஹீனப்படுத்தி, தங்கள் எதேச்சாதிகாரத்தைத் தொடர்ந்து நிலைநாட்டினார்கள்.

இவர்களுடைய வெளிநாட்டுக் கொள்கையும் பிற்போக்காளர்களை ஆதரிப்பதுதான். முதலில் பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களை ஆதரித்து வந்தார்கள். ஹிட்லர் ஆட்சி ஜெர்மனியில் ஏற்பட்ட பின்பு, பாஸிஸ்டுகளை முழுக்க முழுக்க ஆதரித்தார்கள்.

"ருமேனியாவின் உண்மையான ஆளும் வர்க்கம் அன்னிய நாடுகளின் உதவியைத்தான் நாடினார்கள். பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் சக்தி குறையத் துவங்கியபொழுது, தங்களைப் பாதுகாக்கும் புதிய நாடுகளை நாடினார்கள்... பாஸிஸ்டு ஜெர்மனியின் நண்பர்களானார்கள்" என்று "பிரிட்டிஷ் ஸர் வே காண்ட் புக்" கூறுகிறது.

TAMIL NADU ARCHIVES LIBRARY No. MADRAS

"இருள்சூழ்ந்த ஹங்கேரி" என்ற புத்தகத்தில், "1933-ம் வருடத்திற்கு முன்பு எங்களுடைய நிலப் பிரபுக்கள் ஜெர்மனியின் எதிரிகளாக இருந்தார்கள். ஏனென்றால், ஜெர்மனியில் அப்பொழுது ஜனநாயக சர்க்கார் இருந்தது. 1933-ம் வருடத்திற்குப்பின்பு ஹிட்லராட்சி வந்த பின்னர் பாஸிஸ்டு ஜெர்மனியின் நண்பர்களானார்கள்" என்று போலோஸி ஹோர்வாத் கூறுகிறார்.

கிழக்கு ஜெர்மனியிலுள்ள பெரிய நிலச்சுவான்தார்கள்தான் பாசிஸத்திற்கு உறைவிடமாக இருந்தார்கள். ஜெர்மானிய பிற்போக்காளர்களின் கோட்டையாகத் திகழ்ந்தார்கள். இவர்கள் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்திவந்ததால், அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். ஜெர்மனியில் அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் பெரிய முதலாளிகள்தான் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள் என்பது உண்மையே. ஆயினும், நிலச்சுவான்தார்கள் பெரிய முதலாளிகளோடு ஒத்துழைத்தார்கள்; பிற்போக்காளர்களின் முன்னணியை நிறுவினார்கள். சர்க்காருக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள், ராணுவ அதிகாரிகள் முதலியவர்களை இந்த நிலச்சுவான்தார்களின் வர்க்கம்தான் கொடுத்துவந்தது. நிலச்சுவான்தார்களும் ஏகாதிபத்திய விஸ்தரிப்பை ஆதரித்தார்கள். ஏனெனில் பேராசை பிடித்த நிலச்சுவான்தார்களுக்கு மேன்மேலும் நிலம் தேவையாக இருந்தது. அன்னிய நாடுகளை ஆக்கிரமித்து, அடிமைப்படுத்துவதன் மூலமாகத் தானே, புதிதாக நிலம் கிடைக்கும்? தொன்றுதொட்டு அடிமைப் படுகுழியில் ஆழ்ந்து கிடந்த பண்ணை அடிமைகள் நிலச்சுவான்தார்களை எதிர்த்துத் தொடர்ந்து போராடி வந்தார்கள். அவர்கள் கவனத்தை வேறு திசையில் திருப்ப, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு அவசியமும், அவசரமுமாகும். எனவே, இரு கும்பல்களும் ஒன்று சேர்ந்து, ஆக்கிரமிப்பை நடத்தி வந்தார்கள். பாஸிஸ்டு ஜெர்மானியப் படையிலுள்ள தளகர்த்தர்கள் அனைவரும், இந்த நிலச்சுவான்தார் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்.

ஏகாதிபத்தியங்களோடும், பாசிஸ்டுகளோடும் தொடர்பு வைத்துக்கொண்டிருந்த சுதேச முதலாளிகள் சொந்த நாட்டில் ஜனநாயகம் வளர்வதற்கு இடமளிப்பார்களா? ஏகாதிபத்தியங்களுக்கும், பாசிஸ்டுகளுக்கும் வால்பிடிக்கிறவர்கள் அண்டை நாடுகளோடு நேச உறவு வைத்துக் கொள்வார்களா? மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளை ஒன்றோடொன்று மோதும்படி தூண்டிவிட்டால்தானே, பிளவுபட்ட நாடுகளை ஏகாதிபத்தியங்களும், பாசிஸ்டுகளும் சுரண்டிக் கொழுக்கலாம்.

ஏகாதிபத்தியங்களின், பாசிஸ்டுகளின் கைப்பாவையாக இருந்த ஆளும் வர்க்கங்கள் அண்டை நாடுகளோடு சண்டை போட்டுவந்ததில் ஆச்சரியமே கிடையாது.

இத்துடன், நிலச்சுவான்தாரி முறையை அடியோடு ஒழித்து, தொழிற்சாலைகளை யெல்லாம் தேசத்தின் பொதுச் சொத்தாக்கிய சோவியத் யூனியன், முதலாளித்துவ நாடுகளின் கண்ணை உறுத்தி வந்தன. சோவியத் எதிர்ப்புக்கு இந்த நாடுகளை முக்கிய தளமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஹங்கேரி, ருமேனியா முதலிய நாடுகள் உலகத்தில் பல நாடுகளோடு வியாபார ஒப்பந்தம் செய்துகொண்டிருந்ததாகவும், ஆனால் சோவியத் யூனியனோடு மாத்திரம் வியாபார ஒப்பந்தம் செய்துகொள்ள வில்லையென்றும் 1940-ம் வருட "ஸ்டேட்ஸ்மன் வருடாந்திர புத்தகம்" கூறுகிறது.

பாசிஸ்டுகளுக்கு தங்களுடைய நாடுகளை அர்ப்பணம் செய்து, சோவியத் யூனியனைத் தாக்க பாசிஸ்டுகளுக்கு ராணுவ தளங்களைக் கொடுத்தார்கள், இத்துடன், ஜெர்மானிய பாசிஸ்டுகள் சோவியத் யூனியன்மீது படையெடுத்து, சோவியத் நாட்டை சர்வ நாசம் செய்து வந்தபொழுது, பாசிஸ்டுகளோடு சேர்ந்துகொண்டு சோவியத் யூனியனில் சர்வ நாசத்தை விளைவித்து வந்தார்கள்.

நமது நாட்டிலுள்ள நிலைமைதான் இந்த நாடுகளிலும் குடிகொண்டிருந்தது. நாம் நடத்தும் சுதந்திர ஜனநாயகத்தைப் போன்ற போராட்டத்தைத்தான் இந்த நாட்டு மக்களும் நடத்தினார்கள். பெயரளவில்தான் இந்த நாடுகள் சுதந்திர நாடுகளாக இருந்தன. உண்மையில், அன்னிய ஏகாதிபத்தியங்களின் அடிமை நாடாகவே இருந்தது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நிலச்சுவான்தார்கள் அதிகாரத்தில் இருந்தார்கள். நமது நாட்டைப்போல், பொதுஜனங்கள் ஊமைகளாய் அடிமைகளாய் வாழ்ந்தார்கள்.

நம்மைப்போல், தாய்நாட்டை இந்த நாசகாரக் கும்பல்களின் பிடியிலிருந்து விடுவிக்க வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தி வந்தார்கள்.

## சுதந்திர, ஜன நாயக சர்க்கார் உதயம்

இரண்டாவது உலக மகா யுத்தம் நடக்கும் பொழுது, ஜெர்மானிய, ஜப்பானிய, இத்தாலிய பாஸிஸ்டுகள் ஒவ்வொரு நாடாக அடிமைப்படுத்தி வந்தபொழுது, மத்திய, கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பாஸிஸ்டுகளின் ஆதிகத்திலேயே இருந்தன. சுதேச மிற்

போக்குக் கும்பல்கள் பாஸிஸ்டுகளோடு முழுக்க முழுக்க ஒத்துழைத்து, தங்கள் நாடுகளை அவர்களுக்குப் பாத காணிக்கையாகக் கொடுத்தனர்..........

சோவியத் தலைமையில் ஜனநாயக சக்திகள் இந்த பாஸிஸ்டு மிருகங்களோடு போராடி வந்தார்கள். பாஸிஸ்டுகள் முறியடிக்கப்பட்டால்தான் ஜனநாயகமும், சுதந்திரமும் தழைத்தோங்க முடியும். எனவே, சுதந்திர ஜனநாயக வாதிகள் கைகட்டி, வாய் பொத்தி, இந்த யுத்தத்தைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க முடியாது என்று நாம் கூறினோம்.

பாஸிஸ்டுகள் முறியடிக்கப்பட வேண்டும்; ஜனநாயக சக்திகள்தான் வெற்றிபெற வேண்டும். அவர்களுக்குத்தான் நமது பூரண அனுதாபம். ஆனால், யுத்தத்தில் தலையிட முடியாது. சுதந்திரம் கொடுத்தால்தான் தலையிடுவோம், என்று நமது தேசிய காங்கிரஸ் மகாசபை கூறிற்று. சுதந்திரத்தைப் பெருமல் யுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்டால், அது ஏகாதிபத்தியத்தின் கையை வலுப்படுத்தும் என்று தேசியத் தலைவர்கள் வாதித்தார்கள்.......

இது முன்னுக்குப்பின் முரணை இருக்கிறது என்று இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி எடுத்துரைத்தது. ஏகாதிபத்தியம் தானைவே நமக்குச் சுதந்திரத்தைக் கொடுக்காது. அதன் கையிலிருந்து நாம் பலாத்காரமாகப் பிடுங்கவேண்டுமென்றோம். எப்படி? பொதுஜனங்களை ஒன்று திரட்ட வேண்டுமென்றோம். யுத்த காலத்தில், பாஸிஸ்டுகளை முறியடிக்கும் பொதுஜன சக்தியை—ஒன்றுபட்ட பொது மக்களை—யுத்த முடிவில் எந்தச் சக்தியும் தொடவே முடியாதென்று கூறினோம். சுதந்திரத்திற்கு உத்தரவாதமளிப்பது, ஒற்றுமை, ஒற்றுமை என்று கதறினோம். நமது குரல் பொதுமக்களிடையே எதிரொலிக்க வில்லை. நாம் இன்றும் அடிமைகளாகவே வாழ்கிறோம்!.........

மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளும், மேற்கூறியவாறு, நமது நாட்டைப்போல் அடிமை நாடுகள்தான். பல்கேரியா, ஹங்கேரி, யுகோஸ்லேவியா முதலிய நாடுகளிலிருந்து பாஸிஸ்டுகளைத் துரத்திவிட்டால், நாளைக்கு லண்டனில் காபி ஹோட்டல்களில் "இது யுகோஸ்லேவியா சர்க்கார்" என்று ஒரு சிறு அறையில் போர்டு போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கும் பழைய பிற்போக்காளர்கள்தானே வருவார்கள்! அவர்கள் கைதானே வலுக்கும் என்று மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள மக்கள் திண்ணை வேதாந்தம் பேசிக்கொண்டு வாளாவிருக்க வில்லை. "பாஸிஸ்டுகளைக் குழிவெட்டிப் புதைக்கும் ஜனசக்தி, பொதுஜன ஒற்றுமை, பழைய பிற்போக்காளர்களையும் அடியோடு அழிக்

கும்" என்று வீரகர்ஜனை செய்தார்கள். எனவே, ஜனசக்தியை ஒன்று திரட்டினார்கள்.

மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு நாடுகளிலும் பல தேசிய இனத்தினர்கள் வாழ்கிறார்கள். இவர்களை அடக்கி ஒடுக்கி வந்தனர் பழைய சர்க்கார்கள். ஒருவரோடொருவர் முட்டி மோதும்படி தூண்டிவிட்டனர்.

"யாவருக்கும் சரி சமத்துவம், யாவருக்கும் சுயநிர்ணய உரிமை" என்ற அடிப்படையில், அசைக்க முடியாத ஒற்றுமையைக் கட்டினார்கள். பாஸிஸ்டுகளை இடைவிடாது தாக்கி வந்தார்கள்.

இதற்குச் சிகரம் வைத்தாற்போல், செம்படைகள் சுதேச மக்களின் உதவியோடு பாஸிஸ்டுகளை முறியடித்தன. பாட்ஸ்டாம், யால்டா, முதலிய மகாநாடுகளில் ஏகமனதாகத் தீர்மானித்தபடி, பாஸிஸ்டுகளையும், பாஸிஸத்தின் சின்னங்களையும் அறவே துடைத்தெறிந்தனர். புதிய உண்மையான ஜனநாயக சர்க்கார்கள் உருவாயின.

ஏகாதிபத்தியங்களுக்கும், பாஸிஸ்டுகளுக்கும் தேசத்தைப் பாதகாணிக்கையாகக் கொடுத்த தேசத்துரோகிகளை—தொழிலாளர்களையும், விவசாயிகளையும் சுரண்டிக் கொழுத்த புல்லுருவிகளை—அடியோடு அகற்றி, பொதுஜனத் தலைவர்கள் அதிகாரத்திற்கு வந்தார்கள்............

முன்பு, நிலச்சுவான்தார்களின், முதலாளிகளின், ஏகாதிபத்தியங்களின் நல உரிமைகளைப் பாதுகாக்கும் சர்க்கார்கள் இருந்தன. இப்பொழுது, பொதுஜனங்களின் நல உரிமைகளைப் பாதுகாக்கும் சர்க்கார்கள் மலர்ந்தன. எனவே, சமூகத்தையே திருத்தியமைக்க வேண்டியிருந்தது. எனவே, புதிய சமூகத்தை, தொழிலாளர், விவசாயிகளின் நல உரிமையைப் பெரிதெனக் கருதும் புதிய அரசை எப்படி திருத்தியமைப்பது? முதலாளிகளிடமும், நிலச்சுவான்தார்களிடமும் தேசத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் மகத்தான பணியை ஒப்படைத்தால் அவர்கள், அவர்களுடைய வர்க்கத்திற்குச் சாதகமாகவே புதிய சட்ட திட்டங்களை வகுப்பார்கள்.

**ஆகவே, வயதுவந்த ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஓட் உரிமை கொடுத்தார்கள். புதிய அரசியல் நிர்ணய சபைக்கு இந்த நாடுகளில் தேர்தல் நடந்தது. மோத்த வாக்காளர்களில் 95 சத விகிதம் பேர்கள் தேர்தலில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.**

243
13-36



பொது மக்கள் தங்களுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். தேசத்தின் நலனையும், பொதுஜனங்களின் நலனையும் பெரிதெனக் கருதும் தலைவர்கள் புதிய அரசை உருவாக்கினார்கள்.

மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் சுதந்திர, ஜனநாயக சுபிட்ச தேசங்களாகத் திகழவேண்டுமானால், முடியாட்சியும், நிலச்சுவான்தாரி முறையும், முதலாளித்துவமும் அடியோடு ஒழியவேண்டும் என்று முடிவு கட்டினார்கள். அதைக் காரியாம்சத்திலும் நடத்திக்காட்டினார்கள்.

நமது நாட்டில் சுயநிர்ணய சபைக்குத் தேர்தல் நடந்தது. வயது வந்தவர்கள் அனைவருக்கும் ஓட் உரிமை கிடையாது. பொப்பிலி ராஜாக்களும், குமார ராஜா முத்தையா செட்டியார்களும், சுதேச மன்னர்களும் நமது தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறார்களாம்! இவர்கள் என்ன முடிவுகட்டப் போகிறார்கள் என்பதை இப்பொழுதே கூறிவிடலாம். தீர்க்க தரிசனமில்லை, ஜோசியமில்லை—நிலச்சுவான்தார்களுக்கும், முதலாளிகளுக்கும் சாதகமான சட்ட திட்டங்களைத்தான் கொண்டுவரப் போகிறார்கள்..........

மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள தொழிலாளர்களும், விவசாயிகளும் அடிமைகளாக வாழ்ந்தனர். இப்பொழுது, அரசியல், சமூக இயல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் பரிபூரணமாக உரிமை பெற்றிருக்கிறார்கள்.

## விவசாயப் புரட்சி

ஜனங்களுக்குச் சேவை செய்கிற பொதுமக்களின் நல உரிமைகளைப் பாதுகாக்கிற ஜனநாயக சர்க்கார்கள் அமைக்கப்பட்டன. நாட்டின் நலனை உத்தேசித்து, அரசியல் பொருளாதாரம், சமூக இயல் ஆகிய துறைகளில் பல சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். ஆக்கிரமிப்பிற்கும் யதேச்சாதிகாரத்திற்கும், உறைவிடமாக இருந்த நிலப்பிரபுத்துவ முறையை அடியோடு ஒழித்தார்கள். பெரிய நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்து, ஏழை விவசாயிகளுக்கு வினியோகித்தார்கள்.

நிலப் பிரபுத்துவ முறையின் முதுகெலும்பை முறித்ததினால் ஜனநாயகம் வளர்வதற்கு வழி திறந்துவிடப்பட்டிருக்கிறது. எஜமானுக்கும், நிலத்திற்கும் விவசாயிகள் அடிமைப்பட்டுக் கிடக்கும்பொழுது அங்கு ஜனநாயகம் வளர்வதற்கு இடமுண்டா? அரசியலிலும், சமூகத்திலும், பொருளாதாரத்திலும் ஒரு சில நிலச்சுவான்தார்கள் ஆதிக்கம் செலுத்திவரும்பொழுது, கோடா

னுகோடி விவசாயிகள் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் கனவு காணமுடியுமா? நிலச்சுவான்தாருக்கு எதிரிடையாகப் பெருமூச்சு விட்டால் அவன் கதி அதோகதிதான்!

மேலும், நிலப்பிரபுத்துவ முறையை ஒழித்ததனால், பழைய பிற்போக்காளர்கள் திரும்பவும் அதிகாரத்திற்கு வர முடியாது. கேட்டதை அன்னிய ஏகாதிபத்தியங்களின் கைப்பாவையாக மாற்றமுடியாது. விவசாயிகளும் இனிமேல் வறுமையில் குமிழி விடவேண்டியதில்லை. விவசாயக் குடும்பங்களில் சுபீட்சம் இன்ப நடனம் புரிகிறது....

மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளில், புதிய ஜன நாயக சர்க்கார்கள் பின்வருமாறு பெரிய நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்து, அதை நிலமில்லாத விவசாயிகளுக்கும், ஓரிரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

**ஹங்கேரியில்** 290 ஏக்கருக்குமேல் நிலம் வைத்திருந்த பெரிய நிலச்சுவான்தார்களின் நிலத்தையும் விவசாயத் தொழி லில் ஈடுபடாதவர்களும், மாதாகோவிலும் 150 ஏக்கருக்குமேல் நிலம் வைத்திருந்தால், அதையும் பறிமுதல் செய்திருக்கிறார்கள். 1500 ஏக்கருக்குமேல் நிலம் வைத்திருந்தால், அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவில்லை. 1500 ஏக்கர்களுக்கு குறைவாக நிலம் வைத்திருந்தவர்களுக்கு நஷ்டஈடு கொடுத்திருக்கிறார்கள். பறி முதல் செய்த நிலத்தை நிலமில்லாத விவசாயிகளுக்கும், ஓரிரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஏழை விவசாயிகளுக்கும் வினியோ கம் செய்திருக்கிறார்கள். இவ்வாறு மொத்தம் 58,00,000 ஏக்கர் நிலத்தை 7,00,000 விவசாயக் குடும்பங்களுக்கு வினியோகித்திருக் கிறார்கள். அதாவது 35 லட்சம் விவசாயிகள் சராசரி ஒரு குடும் பத்திக்கு 8 ஏக்கர் வீதம் நிலம் பெற்றிருக்கிறார்கள். சர்க்காரால் நடத்தப்படும் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக (கோவாப்பரேடிவ் சொசைடி) ஏழை விவசாயிகளுக்கு கடன், விதை, கருவிகள் முத லியன கொடுத்து, உதவி புரிந்து வருகிறது புதிய ஜனநாயக சர்க்கார்.

**ருமேனியாவில்** 125 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் பெரிய நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்து, 12½ ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருந்த ஏழை விவசாயி களுக்கும், நிலமில்லாத விவசாயிகளுக்கும் வினியோகம் செய்தி ருக்கிறது புதிய சர்க்கார். மொத்தம் 42½ லட்சம் ஏக்கர் நிலத்தை, ஒன்பது லட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு 12½ ஏக்கரிலிருந்து

21 ஏக்கர் வரையிலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

அடிமைகளாக ஏழைகளாக வாழ்ந்த விவசாயிகள் புதிய நிலத்தை எப்படி சாகுபடி செய்யமுடியும்? பொதுஜன சர்க்கார் மாடுகள், விவசாயக் கருவிகள், விதைகள் முதலியன கொடுத்து, உதவி வருகிறது. சர்க்காரே பாங்குகளை ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு கடன் கொடுத்து வருகிறது. எனவே, திரும்பவும் விவசாயிகள் லேவாதேவிக்காரர்களுக்குக் கடன்பட்டு, நிலத்தை இழக்கவேண்டிய நிலைமை ஏற்படாது. மேலும் விவசாயிகள் நிலத்தை ஒருவருக்கும் விற்கக்கூடாதென்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, பழைய நிலச்சுவான்தார்கள் திரும்ப ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தைப் பெறமுடியாது.

புதிதாக கொடுக்கப்பட்ட நிலத்தின் விலை அந்த நிலத்தில் ஒரு வருடம் விளையும் தானியங்கள்தான். இதை 10 அல்லது 20 வருடத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாம்.

**போலந்தில்:** 6724 பெரிய நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தமான 40 லட்சம் ஏக்கர் நிலத்தைப் பறிமுதல் செய்து, 3,02893 விவசாயக் குடும்பங்களுக்கு விநியோகித்திருக்கிறார்கள்.

ருமேனியாவைப் போல், போலந்திலும் 7000 கூட்டுறவு சங்கங்களின் மூலமாக விவசாயிகளுக்கு உதவிபுரிந்து வருகிறது புதிய ஜனநாயக சர்க்கார். இதில் 20 லட்சம் விவசாயிகள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். போலந்திலும், லேவாதேவிக்காரர்களும், நிலச்சுவான்தார்களும் இனிமேல் ஏராளமான நிலத்தைச் சேமிக்க முடியாது.

**யுகோஸ்லேவியாவில்:** "உழுகிற உழவருக்கே நிலம்" என்பதே டிட்டோ சர்க்காரின் கொள்கை. 110 ஏகருக்குமேல் நிலம் வைத்திருப்பவர்களின் நிலத்தையும், விவசாயத் தொழில் செய்யாதவர்களின் அறுபதிலிருந்து எண்பது ஏக்கருக்குமேல் உள்ள நிலத்தையும் பறிமுதல் செய்திருக்கிறார்கள். பாங்குகள் வியாபாரிகள், மாதாகோவில்கள் முதலியவர்களின் நிலத்தையும் பறிமுதல் செய்திருக்கிறார்கள். மாதா கோவில்களுக்கு 12 ஏக்கர் நிலத்தை மாத்திரம் கொடுத்திருக்கிறார்கள். (நமது நாட்டில் மடாதிபதிகளிடம் எவ்வளவு ஏக்கர் நிலம் குவிந்து கிடக்கின்றன? கடவுளின் பெயரால் விவசாயிகளைச் சுரண்டி வருகிறார்கள். போலந்திலும் இதே கும்பலைச் சேர்ந்தவர்கள் இவர்கள்!)

போலந்திலும் நிலத்தை ஒருவருக்கும் விற்கக்கூடாது. பாஸிஸ்டுகளோடு ஒத்துழைத்தவர்களுக்கு மாத்திரம் நஷ்டஈடு

கொடுக்கவில்லை; ஏனையவர்களுக்கு, ஒரு வருடத்தில் விளையும் தானியத்தை நஷ்டஈடாகக் கொடுத்திருக்கிறார்கள்.

கூட்டுறவு சங்கத்தின் மூலமாக விவசாயிகளுக்கு சர்க்கார் உதவிபுரிந்து வருகிறது. இதைத்தவிர கூட்டு பண்ணை முறையையும் அனுமதித்திருக்கிறார்கள். சில விவசாயிகள் ஒன்று சேர்ந்து, சர்க்காரிடமிருந்து நிலத்தை வாங்கி கூட்டாக விவசாயம் செய்து வருகிறார்கள்.

**செக்கோஸ்லோவேகியாவில்:** ஜெர்மானியருக்கும், ஹங்கேரி தேசத்தினருக்கும், பாஸிஸ்டுகளோடு ஒத்துழைத்த சுதேச தேசத் துரோகிகளுக்கும் சொந்தமான நிலத்தைப் பறிமுதல் செய்திருக்கிறது புதிய சர்க்கார். அதாவது மொத்தம் 60 லட்சம் ஏக்கர் நிலம் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விவசாய குடும்பத்திற்கும் இருபத்தெட்டிலிருந்து, முப்பத்தேழரை ஏக்கர் வரையிலும் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். மொத்தம் ஒன்பது லட்சம் விவசாயிகள் புதிதாக நிலம் பெற்றிருக்கிறார்கள்.

**கிழக்கு ஜெர்மனியில்:** கிழக்கு ஜெர்மனியில் சோவியத் சர்க்கார் 250 ஏக்கருக்குமேல் நிலம் வைத்திருக்கும் நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்திருக்கிறது. சென்ற வருடத்தில் 7,745 பெரிய நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தமான 50 லட்சம் ஏக்கர் நிலத்தை 2,70,000 விவசாயிகளுக்கு பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

மாதா கோவில்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் முதலிய ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலத்தை மாத்திரம் பறிமுதல் செய்யவில்லை.

**"இந்த விவசாயப் புரட்சியும், நாஜிகளை முக்கியமான பதவிகளிலிருந்து விலக்கியதும் ஜெர்மனியர் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்திருக்கிறது. பாஸிஸம் ஆழ வேரூன்றியிருந்த வர்க்கம் வேரோடு கெல்லியெறியப்பட்டிருக்கிறது" என்று "நியூ ஸ்டேட்ஸ் மென் அண்டு நேஷன்"** என்ற பிரிட்டிஷ் பத்திரிகை எழுதுகிறது (5-4-46)

**பல்கேரியாவில்:** புதிய சர்க்கார், 1,50,000 ஏழை விவசாயிகளுக்கு நிலம் கொடுத்திருக்கிறது.

**ஆல்பேனியாவிலும்** இதேமாதிரியாக பெரிய நிலச்சுவான்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்து, ஏழை விவசாயிகளுக்கு விநியோகித்திருக்கிறார்கள்.

மத்திய கிழக்கு ஐரோப்பாவிலுள்ள விவசாயிகளின் குடும்பங்களில் இன்று சுபீட்சம் இன்பநடம் புரிகிறது. நமது நாட்டில் இந்த நிலைமை எப்பொழுது வரப்போகிறது? கோடானுகோடி இந்திய விவசாயிகள் எம்பொழுது சுபீட்சமாக வாழப் போகிறார்கள்? ஆம், அந்த நாள் வெகு தூரத்தில் இல்லையென்று துணிந்து கூறலாம். மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள விவசாயிகளைப் போல், நமது நாட்டு விவசாயிகளும் ஸ்தாபனரீதியாக ஒன்று திரண்டு, போர்க் கொடியை உயர்த்தியிருக்கிறார்கள். விரைவில் வெற்றியும் பெறுவார்கள் என்பது திண்ணம்.

## தொழிற்சாலைகள் தேசீய மயமாக்கப்பட்டன

பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களுக்கு இந்த நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளில் பெரும் பாகம் சொந்தம் என்று முன்பு குறிப்பிட்டோம். அவர்களோடு ஒத்துழைத்த சில சுதேச முதலாளிகளுக்கும் சில தொழிற்சாலைகள் சொந்தம். இந்தக் கும்பல்களும் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொழுத்து, சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்தார்கள். இந்த வர்க்கத்தையும் அடியோடு ஒழித்துவிட்டார்கள்.

- யுகோஸ்லேவியாவிலுள்ள 82 சத விகிதம் தொழிற்சாலைகள் இப்பொழுது தேசீய மயமாக்கப்பட்டிருக்கிறது.

- போலந்திலுள்ள தொழிற்சாலைகளில் 60 சத விகிதம் தேசத்தின் பொதுச் சொத்தாக்கப்பட்டிருக்கிறது.

- செக்கோஸ்லோவேகியாவில் 70 சத விகிதம் தொழிற்சாலைகள் தேசீய மயமாக்கப்பட்டிருக்கிறது.

இதே மாதிரியாக மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் தொழிற்சாலைகளில் பெரும்பாலானவை தேசீய மயமாக்கப்பட்டிருக்கிறது. இதன் பலனாக, வாழ்க்கைக்குத் தேவை பொருள்கள் பொது மக்களுக்கு ஏராளமாகக் கிடைக்கிறது.

## தேசீயப் பிரச்சினை தீர்ந்தது

மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றிலும் பல தேசீய இனத்தினர்கள் வாழ்கிறார்கள். இவர்களை அந்தந்த தேசத்திலுள்ள பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் நசுக்கி வந்தது. ஒரு தேசீய இனத்தினரை மற்றொருவர்மீது மூட்டி மோதும்படி

தூண்டிவிட்டு, பிளவுபட்ட மக்களை யதேச்சாதிகார பிற்போக்காளர்கள் அடக்கி ஒடுக்கி வந்தார்கள்.

நமது நாட்டை பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் பிரித்தாளும் சூழ்ச்சி மூலமாக பிளவுபடுத்தி, 40 கோடி மக்களை ஆண்டுவருகிறதல்லவா? சென்னை மாகாணத்தைப் பாருங்கள்! மலையாளிகள், தமிழர்கள், தெலுங்கர்கள், கர்நாடகத்தவர் ஆகிய நான்கு தேசிய இனத்தினரை செயற்கையாகக் கட்டிப்போட்டு நாம் ஒருவரோடொருவர் சண்டைபோடும்படி சூழ்ச்சி செய்திருக்கிறதல்லவா? தெலுங்கர்களும், தமிழர்களும் ஒருவரோடொருவர் அனாவசியமாகச் சண்டைபோடும் நிலைமையை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தானே சிருஷ்டித்திருக்கிறது? இதன்மூலமாக நமது ஒற்றுமையைக் குலைத்து, ஒன்றுபட்ட போராட்டத்தைத் தடுத்து வருகிறதல்லவா? மத்திய கிழக்கு ஐரோப்பாவிலும் இதே நிலைமைதான்.

உதாரணமாக, மாஸிடோனியர்களை கிரீஸ், பல்கேரியா, யுகோஸ்லேவியா ஆகிய மூன்று நாடுகளில் தனித்தனியே பிரித்திருந்தார்கள். இவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் நசுக்கப்பட்டு வந்தனர். சரி சமத்துவம் கொடுக்காமல், சுயநிர்ணய உரிமை கொடுக்காமல் அடிமைப்படுத்தி வந்தார்கள். எனவே, தொடர்ச்சியாக இவர்கள் அந்தந்த ஆளும் வர்க்கத்தை எதிர்த்து உரிமைப் போராட்டத்தை நடத்தி வந்தார்கள்.

யுகோஸ்லேவியாவில்—இந்த சின்னஞ்சிறு நாட்டில்—ஆறு தேசிய இனத்தினர்கள் இருந்தார்கள். இந்த ஆறு தேசிய இனத்தினரும் ஒருவரோடொருவர் போராடி வந்தார்கள்.

ஆகவே, இந்த நாடுகளிலுள்ள மக்களை ஒன்றுபடுத்த வேண்டுமானால், உண்மையான ஜனநாயக சர்க்காரை அமைக்க வேண்டுமானால், அமைதியை நிலைநாட்ட வேண்டுமானால் தேசியப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கவேண்டும்.

எல்லையை மாற்றி யமைத்தால் மாத்திரம் தேசீயப் பிரச்னை தீர்ந்துவிடாது. பொருளாதாரம், அரசியல் ஆகிய பிரச்னைகளோடு இது பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்து கிடக்கிறது. அரசியலிலும், பொருளாதாரத்திலும் யார் சகல மக்களுக்கும் சரி சமத்துவம் கொடுக்க மறுக்கிறார்கள்? சுரண்டும் கும்பல்கள் முதலாளிகளும், நிலச்சுவான்தார்களும்தான்!.

மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் நிலச்சுவான்தாரி முறையை ஒழித்ததன் மூலமாகவும், தொழிற்சாலைகளை தேசிய மயமாக்கியதன் மூலமாகவும் பிறரை அடிமைப் படுத்தி வந்த சுரண்டும் கும்பலை அடியோடு ஒழித்தார்கள். யாவருக்கும்

சரிசமத்துவத்தை வழங்கினார்கள். எனவே தேசியப் பிரச்னையை வெகு சுலபத்தில் தீர்த்துவிட்டார்கள்.

வர்க்கபேதமற்ற சமூகத்தைச் சிருஷ்டித்த பின்னர் சோவியத் யூனியன் தேசியப் பிரச்னையைச் சுமூகமாகத் தீர்க்கவில்லையா? இப்பொழுது 16 குடியரசுகள் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கின்றன!

அதே மாதிரியாக மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளும் ஒன்றோடொன்று நேச உறவு வைத்துக் கொண்டிருப்பதோடு, உள்நாட்டிலும் ஒற்றுமையை ஏற்படுத்தி யிருக்கின்றன.

உதாரணமாக, யுகோஸ்லேவியாவில் கிரோஷியர்கள், மாண்டிநெக்ரியர்கள், மாஸிடோனியர்கள், ஸ்லேவினர்கள், ஸெர்பியர்கள், பாஸ்னியர்கள் ஆகிய ஆறு தேசீய இனத்தினர்கள் இருக்கிறார்கள். சோவியத் யூனியனைப்போல் புதிய குடியரசு இரண்டு சட்டசபைகளை அமைத்திருக்கிறது.

1. யூனியன் சட்டசபை;
2. தேசீய இனத்தினரின் சட்டசபை.

1. யூனியன் சட்டசபைக்கு யுகோஸ்லேவியாவிலுள்ள சகல தேசீய இனத்தினரும் பிரதேச வாரியாக, கூட்டாகத் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்த சபை சகல தேசீய இனத்தினரதும் நல உரிமைகளைப் பாதுகாக்கும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள மேல் சபையைப் போல், கீழ் சபையை நசுக்குவதற்காக இது அமைக்கப்படவில்லை. மேல் சபைக்குள்ள அதிகாரம் கீழ் சபைக்கும் உண்டு.

2. தேசீய இனத்தினரின் சட்டசபையில் மொத்தம் 175 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு தேசீய இனத்தினரிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த சபை தத்தம் தேசீய இனத்தினரின் நல உரிமைகளைப் பாதுகாத்து வருகிறது. ஒரு தேசீய இனம், மற்றொரு தேசீய இனத்தை நசுக்குவதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள்.

இதே மாதிரியாக ஏனைய நாடுகளிலும் சகல தேசீய இனத்தினருக்கும் சரி சமத்துவம் வழங்கி யிருக்கிறார்கள்.

## சோவியத் ஆதிக்கமா, உதவியா?

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்த பின்பு, இவ்வாறு ஐரோப்பா கண்டத்தில் புதிய ஜனநாயகக் குடியரசுகள் ஏற்பட்டிருக்கின்றன.

முன்பு குறிப்பிட்டதுபோல், அன்னிய ஏகாதிபத்தியங்கள் இந்த நாடுகளில் மூலதனத்தைப் போட்டுச் சுரண்டி வந்தன. பிற்போக்காளர்கள் அதிகார பீடத்தில் அமர்ந்திருந்ததால், அவர்களைத் தங்களுடைய கைப்பாவையாக ஏகாதிபத்திய சூதிக்க வேட்டைச் சூதாட்டத்திற்குப் பயன்படுத்தி வந்தார்கள். அதற்கு இப்பொழுது முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

பாஸிஸ்டுகள் இந்த நாடுகளின் பொருளாதாரத்தைச் சிதறடித்தால், உதவிக்குத் தங்களிடம்தான் வரவேண்டும்; அப்பொழுது, தாங்கள் சொல்லும் பிற்போக்காளர்களை அதிகார பீடத்தில் அமர்த்தினால்தான் உதவி புரிவோம் என்று கூறலாம். இவ்வாறு, திரும்பவும் பழைய பிற்போக்காளர்களை அதிகார பீடத்தில் அமர்த்தலாம் என்று ஏகாதிபத்தியங்கள் மனப்பால் குடித்தன. பொருளாதார முட்டுக்கட்டையையும் போட்டு வந்தார்கள். பாஸிஸ்டு கிரீஸுக்கு உதவி புரிந்து வந்த அன்ரா ஸ்தாபனம் இந்த நாடுகளுக்கு உதவி செய்ய மறுத்தது.

ஆனால், சோவியத் யூனியன் நிலைமையைத் தலைகிழாக மாற்றிவிட்டது. தொழிற்சாலைக்கு வேண்டிய யந்திரங்களையும், மூலப் பொருள்களையும் கொடுத்து தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்ய உதவிற்று. விவசாயக் கருவிகளையும், விதைகளையும் கொடுத்துதவி, விவசாயத் தொழிலை முன்னைவிடப் பன்படங்கு விஸ்தரிக்கப் பேருதவி புரிந்தது. எனவே, இந்த நாடுகளின் பொருளாதாரம் சீரமைக்கப்பட்டது. ஏகாதிபத்தியங்களின் ஆசை நிராசையாகப் போயிற்று.

> "சோவியத் யூனியனிலிருந்து முன்னைய பிற்போக்கு சர்க்கார் திருடிக்கொண்டு வந்த 2,000 டிராக்டர்களை (உழுவதற்கு உபயோகிக்கும் யந்திரம்) ருமேனியாவுக்கே சோவியத் யூனியன் திருப்பிக் கொடுத்துவிட்டது"

என்று சென்ற வருடம் ருமேனிய சர்க்கார் அறிவித்தது.

சென்ற வருடம் அக்டோபர் மாதம் 19-ந்தேதியன்று பல்கேரியா சர்க்காரின் வியாபார மந்திரி டிமித்தார் கெஸ்காப், "ரஷ்யா உதவி புரிந்ததால்தான் எங்கள் நாட்டிலுள்ள யந்திரங்கள் இன்று ஓடிக்கொண்டிருக்கின்றன" என்று கூறினர்.

"ஜெர்மானிய சோஷல் டெமொகிராடிக் கட்சியின் தலைவர் டாக்டர் குரோட்வோல், யுத்த நஷ்ட ஈடாக சோவியத் யூனியனுக்கு ஜெர்மனி கொடுத்த 3000 தொழிற்சாலை

களை, சோவியத் யூனியன் ஜெர்மனிக்கே கொடுத்துவிட்டது என்று சோஷியலிஸ்டு-கம்யூனிஸ்டு மகாநாட்டில் கூறினர் ''

என்ற செய்தியை மேற்கோளாக "அமிர்தபஜார்" பத்திரிகை 28-4-46-ல் உபதலையங்கம் எழுதியிருந்தது.

இந்த நாடுகளுக்கு சோவியத் யூனியன் உதவிபுரிந்திருக்கிறதே தவிர, ஆதிக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஏகாதிபத்திய சூழ்ச்சியை சிதறடித்ததால் ஆத்திரம் வருகிறது. வாயில்வந்தபடி உளரிக் கொட்டுகிறார்கள். நமது தேசீயப் பத்திரிகைகள், ஏகாதிபத்தியங் களின் விஷமப் பிரசாரத்தை நமது மக்களிடையே "இன்ஜெக் ஷன்" செய்து வருகிறார்கள். தொழிலாளர்களின், விவசாயி களின் இயக்கத்தையும், போராட்டத்தையும் "கம்யூனிஸ்ட்களால் தூண்டிவிடப்பட்டவர்கள்" என்ற போர்வையின் கீழ் எதிர்க்கிற வர்கள்தான் இந்தப் பொய்ப்பிரசாரத்தைச் செய்கிறார்கள். நிலச் சுவான்தாரி முறையை ஒழித்து, தொழிற்சாலைகளை தேசீயமய மாக்கிய உண்மையான ஜனநாயகக் குடியரசுகளை "சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கத்திலுள்ள" நாடுகள் என்ற போர்வையில் எதிர்த்து வருகிறார்கள்.

நமது லட்சியம் நிலச்சுவான்தாரி முறை ஒழியவேண்டும் தொழிற்சாலைகள் அனைத்தும் தேசத்தின் பொதுச் சொத்தாக்கப் படவேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் துரத்தியபின்பு நாம் உருவாக்கப்போகும் சுதந்திர இந்தியா இப்படித்தான் இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். எனவே, நமது லட்சி யத்தை முன்னமேயே அடைந்திருக்கும் நாடுகளை நாம் கொட்டு முழக்கத்துடன் வரவேற்கிறோம்.

## ஜனநாயகமில்லையா? சுரண்டுதலில்லையா?

இந்த நாடுகளில் ஜனநாயகமில்லை என்று ஏகாதிபத்தியங்கள் கூறுவதில் ஏதேனும் உண்மையிருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

ஜனநாயகம் என்ற வார்த்தை முதன்முதலில் கிரீஸில்தான் தோன்றிற்று. ஜனங்களுடைய ஆட்சி; ஜனங்களால் ஜனங்களு டைய நன்மைக்காக,—ஜனங்கள் தங்களுடைய விருப்பம்போல் பொதுஜனங்கள் அரசாங்கத்தை அமைத்து, அதைத் தாங்க ளாகவே நடத்துவது என்று அர்த்தம். சகல துறைகளிலும், சகல மக்களுக்கு சரிசமத்துவம் இருக்கவேண்டும். பேசவும், எழுதவும், ஸ்தாபனம் அமைக்கவும் பரிபூரண சுதந்திரம் அளிக்க வேண்டும்.

முதலாளித்துவ சமூகத்தில், தொழிலாளி—முதலாளி, நிலச்சுவான்தார்—விவசாயி, ஆளும்வர்க்கம் ஆளப்படும் வர்க்கம் எனவும், சுரண்டும் வர்க்கம்—சுரண்டப்படும் வர்க்கம் எனவும் சமூகம் பிளவுபட்டுக் கிடக்கும்பொழுது, சரிசமத்துவத்திற்கு இடமே கிடையாது. பணம் படைத்தவர்கள்தான் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். முதலாளித்துவ சமூகத்தில் ஜனநாயகம் இருப்பதாகக் கூறப்படுகிறது. யாருக்கு? பணம்படைத்த நிலச்சுவான்தார்களுக்கும், முதலாளிகளுக்கும்தான் ஜனநாயகம். விவசாயிகளையும், தொழிலாளர்களையும் சுரண்டச் சுதந்திரம். ஏனைய நாடுகளை அடிமைப்படுத்தச் சுதந்திரம். பெரும்பாலோரான பொதுமக்களின் விருப்பப்படி நடக்கிறார்களா? இரண்டணா சம்பளத்தைக் கூட்டிக்கொடுக்கும்படி கேட்டால், போலீஸும், பட்டாளமும், கோர்ட்டும், ஜெயிலும் ஓடி வருகின்றன. அமெரிக்காவிலும், பிரிட்டனிலும்தான் உண்மையான ஜனநாயகம் இருப்பதாக சர்ச்சில், அமெரி, பர்ன்ஸ், பெவின் கும்பல்கள் தம்பட்டமடிக்கிறார்கள்.

ஆனால், அமெரிக்காவில் 20 லட்சம் நீக்ரோக்களுக்கு ஓட்டுரிமை கிடையாது. வெள்ளையர்களால் அடிமைகளாகவே பாவிக்கப்படுகிறார்கள். அமெரிக்காவிலுள்ள தொழிலாளர்கள், முதலாளிகளுக்குச் சமானமானவர்களா? இல்லை.

பிரிட்டனை எடுத்துக் கொள்வோம். நிலச்சுவான்தார்களுக்கும், பெரிய முதலாளிகளுக்கும், பட்டம்பெற்றவர்களுக்கும் மாத்திரம் இரண்டு ஓட்டுகள். பிரபுக்கள் சபை பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையல்ல.

நமது நாட்டை எடுத்துக் கொள்வோம். சமீபத்தில் சட்டசபைகளுக்குத் தேர்தல் நடந்தது. மத்திய சட்டசபைக்கு, நூறில் ஒருவருக்குத்தான் ஓட்டுரிமை. மாகாண சட்டசபையில் நூறில் 24 பேருக்குக்கூட ஓட்டுரிமை கிடையாது......

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அமைத்திருக்கும் அரசியல் நிர்ணய சபைக்கு, வயது வந்தவர்கள் அனைவருக்கும் ஓட்டுரிமை கொடுத்து, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார்களா? இல்லை. கோடானுகோடி விவசாயிகளின், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எத்தனை பேர்கள் அரசியல் நிர்ணய சபையில் இருக்கிறார்கள்? குமாரராஜாக்களும், பொப்பிலி ராஜாக்களும்தானே கோடானுகோடி ஏழைகளின் வருங்கால அரசியலை நிர்ணயிக்கப் போகிறார்கள்!

ஜெனரலிஸிமோ ஸ்டாலின் கூறுவதுபோல் பிரிட்டனில் ஒரே ஒரு கட்சிதான்—தொழிற்கட்சிதான்—அதிகாரத்திலிருக்கிறது. ஏனைய கட்சிகள் சர்க்காரில் பங்கெடுத்துக்கொள்ள முடியாது. அமெரிக்காவில் இரண்டு கட்சிகளைத் தவிர—ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி—வேறு கட்சிகளுக்கு இடமேயில்லை.

ஆனால், மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சமீபத்தில் அரசியல் நிர்ணய சபைகளுக்கு தேர்தல் நடந்தது. வயதுவந்த சகல ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஓட்டுரிமை அளித்தார்கள். 90 லிருந்து 95 சதவிகிதம் வரையிலும் வாக்காளர்கள் தேர்தலில் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

இந்த நாடுகளில் ஒரே கட்சிக்காரர் அல்ல; கூட்டு சர்க்கார் அமைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக போலந்தில், போலந்து தொழிலாளர் கட்சி, சோஷலிஸ்ட்டுக் கட்சி, விவசாயிகள் கட்சி கம்யூனிஸ்டுக் கட்சி, ஜனநாயகக் கட்சி ஆகிய பல கட்சிகளின் கூட்டு சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. செக்கோஸ்லோவேகியாவில் பொதுஜன சோஷலிஸ்டுக் கட்சி, சோஷல் டெமொகிராடிக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி, பொதுஜனக் கட்சி ஆகிய பல கட்சிகளின் கூட்டு சர்க்கார் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதே மாதிரியாகவே ஏனைய நாடுகளிலும் கூட்டு சர்க்கார்கள் ஏற்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியா, பர்மா, மலேயா, சிலோன் முதலிய நாடுகளுக்குச் சுதந்திரமும், ஜனநாயகமும் கொடுத்திருக்கிறார்களா? இல்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம் பிலிப்பைனுக்குச் சுதந்திரமும், ஜனநாயகமும் கொடுத்திருக்கிறதா? இல்லை.

ஆகவே, இவர்கள் ஜனநாயகமில்லை என்று சொல்வதன் அந்தரங்க நோக்கம் இதுதான். உண்மையான ஜனநாயகக் குடியரசுகள், தொழிற்சாலைகளை தேசிய மயமாக்கியிருப்பதன் மூலமாக, ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு முற்றுப் புள்ளி வைத்திருக்கிறார்கள். எனவே, ஜனநாயகமில்லை என்ற போர்வையில், சுரண்டச் சுதந்திரமில்லை என்று கதறுகிறார்கள்.

## போர் தொடுத்தால்.........

பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள், தங்களுடைய சுரண்டுதலை ஆதரித்துவந்த பழைய தேசத் துரோகிகளைத் திரும்பவும் அதிகாரத்திற்குக் கொண்டுவர சூழ்ச்சி செய்கிறார்கள். இப்பொழுது படுதோல்வியுற்றிருக்கிறார்கள். எனவே, இந்த உண்மையான ஜனநாயக நாடுகள்மீது போர் தொடுக்க முயற்சி

செய்கிருர்கள். முதல் உலக மகா யுத்தம் முடிந்தபின்பு ரஷ்யாவிலும், மத்திய, கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகளிலும் புரட்சி நடந்தது. சோவியத் யூனியனில் மாத்திரம் புரட்சி வெற்றி பெற்றது. ஏனைய நாடுகளில் பிற்போக்காளர்கள் புரட்சியை மிருகத்தனமாக நசுக்கினர்கள். அப்பொழுது ஏகாதிபத்தியங்களின் கொள்கை புரட்சியை, சுதந்திர, ஜனநாயக சக்தியை நசுக்குவதுதான்.

1919-ம் வருடம் மார்ச் மாதம் நடந்த சமாதான மகாநாட்டிற்கு லாயிட் ஜார்ஜ் ஒரு யாதாஸ்தை அனுப்பினர். அதில் ஐரோப்பா முழுதும் புரட்சி என்ற சண்டமாருதம் வீசியடிப்பதாகவும் அதை அடக்கவேண்டுமென்றும், சோவியத் ஏகாதிபத்தியம் அதன் எல்லைப்புறத்திலுள்ள நாடுகளை மாத்திரமின்றி, ஆசியாவிலுள்ள நாடுகளையும், அமெரிக்காவையும், பிரான்ஸையும் அச்சுறுத்தி வருவதாகவும் அதை அடக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்பொழுது உணவை ஏகாதிபத்திய விஸ்தரிப்புக்கும், சுதந்திர, ஜனநாயக இயக்கங்களை நசுக்கவும் பயன்படுத்தி வருவதுபோல், இதே ஹூவர் முதல் உலக மகா யுத்தம் முடிந்த பின்பு, ஆங்காங்கே வெடித்த சுதந்திர, ஜனநாயக இயக்கத்தை நசுக்க உபயோகித்து வந்தார்கள்.

ஆனல், இப்பொழுது காலம் மாறிவிட்டது. ஜெனரலிஸிமோ ஸ்டாலின் கூறுவதுபோல், கோடானு கோடி பொதுமக்கள் விழிப்படைந்திருக்கிருர்கள்; அப்பாவிகளல்ல. எனவே, ஏகாதிபத்தியங்களின் மாயவலையில் சிக்கவில்லை.

> "இரண்டாவது உலக மஹா யுத்தம் முடிந்த பின்பு கிழக்கு ஐரோப்பா கண்டத்திலுள்ள நாடுகள்மீது புதிதாகப் படையெடுக்க, சர்ச்சிலும், அவரது நண்பர்களும் முயற்சி செய்து வருகிருர்கள். அதில் வெற்றி பெறுவார்களா, மாட்டார்களா என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள் என்றே நம்புகிறேன். ஏனெனில், கோடிக்கணக்கான சாதாரண மக்கள் சமாதானத்தைப் பாதுகாக்க அணிவகுத்து நிற்கிருர்கள். ஒருசமயம் போராட்டத்தை ஆரம்பிப்பதில் வெற்றிபெற்ருலும், முன்பு—26 வருடங்களுக்கு முன்பு முறியடிக்கப்பட்டதுபோல் (சோவியத் யூனியனை நசுக்க 14 நாடுகள் படையெடுத்து படுதோல்வியடைந்ததுபோல்)—இப்பொழுதும் மண்ணைக் கவ்வுவார்கள் என்பது நிச்சயம்"

என்று மார்ச்சு மாதம் 5-ந்தேதியன்று அமெரிக்காவில் போர் முழக்கம் செய்த சர்ச்சிலுக்கு ஸ்டாலின் பதிலிறுக்கையில் குறிப்பிட்டார்.

நாம் எந்தக் கட்சியில்? நமது லட்சியத்தை உட்கொண்ட நாடுகளை நிச்சயமாக ஆதரிக்கத்தான் செய்வோம். நமது எதிரிகளாகிய சர்ச்சில், அமெரி கும்பல்களின் சூழ்ச்சியை முறியடிக்கத்தான் செய்வோம்.

2 SEP 1946
TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 97635
MADRAS-600 008

12-6-96
9.7.96
243
13-36

# அவசியம் பார்க்கவேண்டியது

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயமுறுத்தல் | 0 | 2 | 0 |
| புதிய பாரசீகம் ... | 0 | 10 | 0 |
| காங்கிரசில் சமரசவாதிகள் வெற்றி ... | 0 | 3 | 0 |
| 3-வது விவசாயிகள் (மகாநாடு படங்களுடன்) | 0 | 6 | 0 |
| காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு கம்யூனிஸ்டுகளின் பதில் (3-ம் பாகம்)... | 1 | 4 | 0 |
| உழவர் யாதாஸ்து ... | 0 | 1 | 0 |
| நெசவாளருக்கு நூல்; மக்களுக்கு துணி ... | 0 | 2 | 0 |
| பஞ்சாலைத் தொழிலாளர் கோரிக்கைகள் ... | 0 | 3 | 0 |
| சமஸ்தானத்திலிருந்தும் வெளியேறு ... | 0 | 2 | 0 |
| தருவது என்ன? ... | 0 | 2 | 0 |
| தென்னாப்பிரிக்க இந்தியர் போராட்டம் ... | 0 | 3 | 0 |
| கொலைபாதகர் சூதாட்டம் ... | 0 | 6 | 0 |
| பகத் சிங்கும் அவரது தோழர்களும் ... | 0 | 8 | 0 |
| சுதந்திரத்திற்காக இறுதிப் போராட்டம் ... | 1 | 4 | 0 |
| எல்லோருக்கும் வேலை—(பி. டி. ரணதிவே)... | 0 | 4 | 0 |
| எல்லோருக்கும் உணவு—(ஜி. அதிகாரி) ... | 0 | 5 | 0 |
| பொதுமக்களுக்காக ரெயில்வே ... | 0 | 2 | 0 |
| விவசாயிகளும் கம்யூனிஸ்ட் கட்சியும் ... | 0 | 4 | 0 |
| ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு ... | 0 | 3 | 0 |
| காந்தி - ஜோஷி கடிதப் போக்குவரத்து ... | 0 | 8 | 0 |
| ஒப்பிலாத சமுதாயம்—(டி. என். பிரிட்) ... | 0 | 8 | 0 |
| வெற்றி யாருக்கு?—(பி. ஸி. ஜோஷி) ... | 0 | 4 | 0 |
| முஸ்லிம் லீகை ஏன் ஆதரிக்கிறோம் ... | 0 | 1 | 6 |
| தேசபக்தி வெல்லும், ரௌடித்தனமல்ல ... | 0 | 1 | 0 |
| சிட்டகாங் வீரர்கள் 2, 3, 4, 5 ... | 0 | 2 | 0 |
| ,, 6 (கல்பனாதத்) ... | 0 | 4 | 0 |

ஜனசக்தி பிரசுராலயம்
ஜி. டி., சென்னை